செய்தி வெளியீடுஎண்:543 நாள்:27.08.2019

## செய்தி வெளியீடு

சென்னை, அண்ணாசாலையில் உள்ள P.T.Lee. செங்கல்வராயன் நாயக்கர் கட்டிடத்தில், தமிழ்நாடு பைபர்நெட் நிறுவனத்திற்கான புதிய அலுவலகத்தை மாண்புமிகு வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மாண்புமிகு R.B. உதயகுமார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு பைபர்நெட் கார்பரேஷன் (TANFINET), மத்திய அரசின் பாரத்நெட் மற்றும் மாநில அரசின் தமிழ்நெட் ஆகிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகள், 528 பேரூராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 15 மாநகராட்சிகள் அனைத்தையும் கண்ணாடி இழை கட்டமைப்பு (Optic Fibre Infrastructure) மூலம் இணைக்கப்படவுள்ளது. இதன் மூலம், தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும், தனிநபர்களுக்கும் அதிவேக இணையம்(High Speed Internet )வழங்கப்படும்.

பாரத்நெட் திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த சுமார் ரூ.2411/- கோடி செலவிலான திருத்திய வரைவுத் திட்ட அறிக்கை மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

இவ்வலுவலக திறப்பு விழாவில் தகவல் தொழில்நுட்ப துறை, முதன்மை செயலாளர்/ தமிழ்நாடு பைபர்நெட் கார்பரேஷனின் மேலாண்மை இயக்குநர், டாக்டர்.சந்தோஷ்பாபு,இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னாளுமை முகமை, முதன்மை செயல் அலுவலர், திரு.சந்தோஷ் மிஷ்ரா,இ.ஆ.ப., இணை இயக்குநர், திருமதி.ரமனசரஸ்வதி,இ.ஆ.ப, மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**